**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 6/2025**
**Prosecution Witness - PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கோபி |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2026.
(A1 and A4 present. A2, A3, A5 absent. 355 BNSS petition filed for them with an undertaking that identity will not be disputed. Hence petition allowed.).
<u>முதல் விசாரணை</u>–

நான் காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் இரணியல் காவல் நிலையத்தில் பணிபுரியும்போது 05.12.2016 ம் தேதி காலை 6 மணிக்கு நானும், இரணியல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஜின்னா பீர் முகமது மற்றும் தலைமை காவலர் 1314 பெயர் நினைவில் இல்லை. தலைமை காவலர் 349 மற்றும் 261 மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் ரோந்து செல்லும்போது , திங்கள் நகர் மோட்டார் பைக் பார்க்கிங்கின் பின்புரம் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு, நின்றவர்கள் ஏதோ சதி திட்டம் தீட்டிகொண்டு திங்கள் நகர் ஸ்டேட் பாங்கினை ( SBI) கொள்ளையடிக்க வேண்டும் என்று கூறி அதில் கிடைக்கும் பணம் நகையை எடுத்துக்கொண்டு சென்றுவிடலாம் என்று கூறி நின்றவர்களை, போலீஸ் பார்ட்டியாகிய நாங்கள் மடக்கி பிடித்து பின்னர் ஊர் பெயர் விலாசம் தெரிந்த 1) ரவி, 2) பிரபு, 3) ஐவன், 4) சுரேஷ் 5) பிரிட்டோ ஆகியோர் ஆயுதங்களுடன் நின்றவர்களை பிடித்தும் , அவர்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களை அத்தாட்சியில் கைபற்றினோம். எதிரிகளை சொத்துகளுடன் நிலையம் கொண்டுவரப்பட்டது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். தற்போது ஆஜராகியிருக்கும் எதிரிகள் இருவரும் அந்த குற்ற சம்பவத்தில் 5 பேர்களில் இருந்தார்கள். அவர்கள் பெயர்கள் நினைவில் இல்லை. ஆஜரில் இல்லாத மற்ற 3 எதிரிகளின் பெயர், அடையாளம் எனக்கு நினைவில் இல்லை.

<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் என்னை 05.12.2016 அன்றே விசாரித்தார். அவர் பெயர் சுதர்சன் என்று நினைக்கிறேன். சரியாக நினைவில் இல்லை. நாங்கள்

மொத்தம் 6 பேர் ரோந்து பணிக்கு சென்றோம். காவல் நிலையத்தில் இருந்து காலை 5.30 மணிக்கு ரோந்து பணிக்கு சென்றோம். மேல் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் அன்று ரோந்து பணி நடத்தவில்லை என்றால், சரிதான். நாங்கள் போலீஸ் ஜீப்பில் ரோந்திற்கு சென்றோம். அன்று ரோந்து பணிக்கு இரணியல், குருந்தன்கோடு மற்றும் திங்கள் நகர் ஆகிய மூன்று இடங்களுக்கும் சென்றோம். குருந்தன் கோட்டில் எந்த இடத்திற்கு சென்றோம் என்று குறிப்பாக நினைவில் இல்லை. குருந்தன் கோட்டில் உள்ள பாதி பகுதியானது வெள்ளி சந்தை காவல் நிலைய ஆள்வரைக்கு உட்பட்டது என்றால், சரிதான். ரோந்திற்கு செல்லும்போது வண்டியை எந்த இடத்திலாவது நிறுத்தினோமா என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. நாங்கள் ரோந்துபோன விபரம் காவல் நிலைய பதிவேடுகளில் இருக்கும். என்னை விசாரிக்கும்போது காவல் ஆய்வாளர் அந்த பதிவேடுகளை பார்வையிட்டாரா என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. நாங்கள் அன்று ரோந்து பணிக்கே செல்லவில்லை என்றால், சரியல்ல. மேல் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டதுபோல எந்த எதிரிகளையும் கைது செய்யவோ, எந்த பொருட்களையும் கைப்பற்றவோ இல்லை என்றால், சரியல்ல. புள்ளி விபரங்களுக்காக பதிவு செய்யப்பட்ட இந்த தவறான வழக்கில் நான் காவல் துறை மேல் அதிகாரிகளுக்கு ஆதரவாக, தவறுதலாக, சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**